# காரமடை நகராட்சி

2022 ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர் அவர்கள்

V Ushavenkatesh
நகரமன்றத் தலைவர்
காரமடை நகரமன்றம்

---

**பொருள் : 1**

திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர், அவர்களால் கொண்டுவரப்படும் பொருள்.

அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021ன்படி காரமடை பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்தியமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நகரமன்றம் தனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**பொருள் : 2**

காரமடை நகராட்சி ஆணையாளரது ஜனவரி 2022 மாதத்தின் நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு :-** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் : 3**

காரமடை நகராட்சி ஆணையாளரது பிப்ரவரி 2022 மாதத்தின் நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு :-** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் : 4**

தேர்தல் காலத்தில் நடைபெற்ற அரங்கநாதர் கோயில் தேர்த்திருவிழா சிறப்பு பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டது மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற வார்டு உறுப்பினர்கள் அமர்வதற்கு கூடுதல் இருக்கைகள் வாங்கியது, நகரமன்ற தலைவருக்கென தனி அறை மற்றும் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகளை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம்

1920 பிரிவு 15ன்கீழ் கீழ்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது, நகரமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | செலவின விபரம் | செலவினத் தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | அருள்மிகு அரங்கநாதர் கோயில் தேர்த்திருவிழா-2022க்கு தண்ணீர் பந்தல், பக்தர்கள், வியாதியஸ்தர்கள் தங்குவதற்கு தகர பந்தல்கள், லாரி மூலம் தண்ணீர் சப்ளை மற்றும் கழிவுகள் சேகரம் செய்ய டிராக்டர்கஸ் வாடகைக்கு பயன்படுத்தியது. | 316685 |
| 2 | அருள்மிகு அரங்கநாதர் கோயில் தேர்த்திருவிழா-2022க்கு பொது சுகாதார பொருட்கள் சப்ளை செய்தது. | 60417 |
| 3 | அருள்மிகு அரங்கநாதர் கோயில் தேர்த்திருவிழா-2022க்கு பொது சுகாதார பொருட்கள் சப்ளை செய்தது. | 106722 |
| 4 | அருள்மிகு அரங்கநாதர் கோயில் தேர்த்திருவிழா-2022க்கு மொபைல் டாய்லெட் சப்ளை செய்தது. | 119810 |
| 5 | அலுவலக பராமரிப்பு செலவினம். | 1751612 |

<u>அ.கு :-</u> பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் : 5</u>

2021-2022 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வார்டு எண்.19, சர்வே எண்.117/1V-ல் சஞ்சய் காந்தி நகர் அருகில் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.36.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கு பொது மக்கள் பங்களிப்பு ரூ.12.00 இலட்சம் ஆகும். இப்பணிக்கான மொத்த மதிப்பீடு தொகை ரூ.36.00 இலட்சத்தில் பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.12.00 இலட்சம் போக பாக்கி தொகை ரூ.24.00 இலட்சத்தை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் முழு மான்யமாக கோரி பெற்று மேற்கண்ட பூங்கா பணியினை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு :-</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2021-2022 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்ட மதிப்பீடு ரூ.36.00 இலட்சத்தில் பொது மக்கள் பங்களிப்பு ரூ.12.00 இலட்சம் நீங்கலாக எஞ்சிய தொகை ரூ.24.00 இலட்சத்தை அரசின் முழு மான்யமாக பெற்று வார்டு எண்.19, சர்வே எண்.117/1V-ல் சஞ்சய் காந்தி நகர் அருகில் பூங்கா அமைக்கும் பணியினை செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் : 6</u>

காரமடை நகராட்சியில் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியில் பதிவியேற்றுள்ள நகரமன்றத் தலைவர் 27 வார்டுகளில் உள்ள அடிப்படை வசதிகள், குறைகளை நேரில் சென்று கேட்டறியவும் மற்றும் குடிநீர் திட்ட நிலையங்களை பார்வையிடுவதற்கும் சென்று வருவதற்கு புதிதாக ஈப்பு வாகனம் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1725/2022/எம்3, நாள்.24.02.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள அரசு

நிர்ணயிக்கப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்கு உட்பட்டு சாதாரண மாடல் (Basic Model) வாங்குவதற்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- காரமடை நகராட்சியானது 19.827 ச.கி.மீ பரப்பளவு, 27 வார்டுகள் கொண்டுள்ளது. மேலும் காரமடை நகராட்சியில் தனிக்குடிநீர் திட்டம் செயல்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை பார்வையிடுவதற்கும் மேலும் காரமடை நகராட்சியானது தற்போது புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி என்பதால் நகர மன்றத்தலைவருக்கென ஈப்பு வாகனம் இல்லாததால் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு ஈப்பு வாகனம் வாங்கவும், அதற்காகும் செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

பொருள் : 7

காரமடை நகராட்சியில் வரியில்லா குத்தகை இனங்களில் நகராட்சி சந்தை, கடைகள், சைக்கிள் ஸ்டாண்ட் உள்ளிட்ட 27 இனங்கள் உள்ளன. அவற்றில் கீழ்கண்ட குத்தகை இனங்களில் குத்தகை காலம் 31.03.2022 உடன் முடிவடைகிறது.

| வ. எண் | குத்தகை விபரம் | முடிவடையும் நாள் | குறிப்புரை |
|---|---|---|---|
| 1 | காரமடை வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம்.<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) | 31.03.2022 | - |
| 2 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.04<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு–மாத வாடகை அடிப்படையில்) | 31.03.2022 | - |
| 3 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.05<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 31.03.2022 | - |
| 4 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.07<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 31.03.2022 | - |
| 5 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.08<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 31.03.2022 | - |
| 6 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.11<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 31.03.2022 | - |
| 7 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.12<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 31.03.2022 | - |
| 8 | அண்ணா பேருந்து நிலைய நவீன கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்<br>(ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) | 31.03.2022 | - |
| 9 | வட்டக்கிணறு தெற்கு பக்கம் உள்ள காலியிடம் டீ கடை வைத்தல். | 31.03.2022 | - |
| 10 | காரமடை நகராட்சி அலுவலகத்திற்கு வடக்குபுறமுள்ள இடத்தில் சைக்கிள் ஸ்டாண்ட் நடத்துதல். (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) | 31.03.2022 | - |

மேற்கண்ட குத்தகை இனங்களை அனுபவிக்கும் உரிமையினை 01.04.2022 முதல் சிறப்பு மற்றும் பொது நிபந்தனைக்குட்பட்டு பகிரங்க ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதற்கு ஆகும் தினசரி நாளிதழ் விளம்பர செலவினங்களும் நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் பின்னேற்பு அளிக்கலாம்.

**பொருள் : 8**

காரமடை நகராட்சியில் தனிக்குடிநீர் திட்டத்தில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள 17 மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டிகளும், 72 போர்வெல் மூலம் உப்புநீர் சின்டெக்ஸ் தொட்டிகளும், 10 மின்மோட்டார் அமைத்துள்ள 11 கிணறுகளும் உள்ளன. குடிநீர் விநியோகத்தில் 20 கி.மீ பிரதான குழாயும், 109.62 கி.மீ பகிர்மான குழாய்களும் உள்ளன.

இவற்றினை இயக்கவும், வால்வுகளின் மூலம் உரிய இடங்களுக்கு குடிநீரினை விநியோகம் செய்ய நிரந்தரப் பணியாளர்கள் 12 பேரும் மற்றும் குழுவின் மூலம் தற்காலிக பணியாளர்கள் 26 பேரும் பணிபுரிந்து வருகின்றனர். இக்குடிநீர் விநியோகத்தில் முதன்மை பிரதான குழாயிலும், பகிர்மான குழாயிலும் ஏற்படும் குடிநீர் கசிவு பழுதுகளை போதிய பணியாளர்கள் இல்லாததால் பணியினை சரிவர செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால் குடிநீர் விநியோகம் தடைப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு காரமடை நகராட்சி பகுதிகளில் ஏற்படும் கசிவு, பழுது போன்றவற்றினை தடையின்றி கவனிக்க ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கவும், அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :-** குடிநீர் விநியோக பணியில் போதிய ஆட்கள் பற்றாகுறையாலும், தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாததாலும், ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

**பொருள் : 9**

காரமடை நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் உந்து நிலையம் மற்றும் 27 வார்டுகளில் உள்ள பம்புகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | மின் மோட்டார் குதிரை திரன் | எண்ணிக்கை | அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|
| 1 | 10 HP | 2 | 1) நெல்லித்துறை தலைமை நீரேற்று நிலையம் 2) தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையம் 3)கிட்டாம்பாளையம் நீர் உந்து நிலையம் |
| 2 | 15 HP | 1 | |
| 3 | 35 HP | 3 | |
| 4 | 40 HP | 4 | |
| 5 | 50 HP | 2 | |
| 6 | 60 HP | 2 | |
| 7 | 70 HP | 2 | |
| | **மொத்தம்** | **16** | |
| 1 | 2 HP | 19 | 27 வார்டுகள் |
| 2 | 5 HP | 5 | |
| 3 | 7.5 HP | 44 | |
| 4 | 10 HP | 4 | |
| | **மொத்தம்** | **72** | |

குடிநீர் பணிக்கென உள்ள பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததாலும், மின்மோட்டார்களை பராமரிக்கவும் சரி செய்யவும், போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் அனுமதிக்கப்படாததாலும், இதில் ஏற்படும் பழுதுகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. குடிநீர் விநியோகம் பணி காரமடை நகராட்சியிலிருந்து சுமார் 9 கி.மீ தொலைவிலிருந்து பவானி ஆற்று படுகையில் எடுக்கப்பட்டு வருவதாலும், மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதினால் நகரின் குடிநீர் விநியோகம் வெகுவாக பாதிப்படைகிறது.

எனவே மேற்கண்ட பம்பு மற்றும் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதினை உடனுக்குடன் மேற்கொள்ளவும், குடிநீர் தடையின்றி கிடைக்க ஆவண செய்யவும், இத்துறையில் தேர்ச்சி பெற்ற நிறுவனத்தினருக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஆண்டு பராமரிப்பிற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கவும், அதற்கு ஆகும் தோராய செலவு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> குடிநீர் விநியோக பணியில் போதிய ஆட்கள் பற்றாகுறையாலும், தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாததாலும், ஆண்டு பராமரிப்பு ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் : 10</u>

காரமடை நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் தனிக்குடிநீர் திட்டத்தில் தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் ஆலம் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்யவதற்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> குடிநீர் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு உரிய விதிமுறைகளின்படி வாங்கவும், அதற்காகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் : 11</u>

காரமடை நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் தனிக்குடிநீர் திட்டத்தில் தேக்கம்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் குளோரின் லிக்விட் சிலிண்டர் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்யவதற்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> குடிநீர் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு உரிய விதிமுறைகளின்படி வாங்கவும், அதற்காகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் : 12</u>

காரமடை நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவைப்படும் பொது சுகாதார உபகரணங்கள் அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் கொள்முதல் செய்யவும், அதற்காகும் செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> பொது சுகாதார அவசர அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு உரிய விதிமுறைகளின்படி வாங்கவும், அதற்காகும் செலவினத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் : 13</u>

காரமடை நகராட்சியில் 1807 குழல் விளக்குகள், 249 சோடியம் ஆவி விளக்குகள், 41 சி.எப்.எல் விளக்குகள், 475 எல்.இ.டி.விளக்குகள் மற்றும் 3 உயர்மின் கோபுர விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தெருவிளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பொது மக்கள் நலன் கருதி அவசர அவசியம் சரிசெய்யவும், அதற்கான தெருவிளக்கு உபகரணங்களை ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் கொள்முதல் செய்யவும், அதற்காகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> பொது மக்களின் அவசர அத்தியாவசித்தை கருத்தி கொண்டு தெருவிளக்கு உபகரணங்களை ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் கொள்முதல் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் : 14</u>

காரமடை நகராட்சியில் 28.01.2022 முதல் 04.03.2022 முடிய நகர்புற உள்ளாட்சி தேர்தல்-2022 பணிகள் நடைபெற்று வந்ததால் வரிவசூல் பணிகள் மேற்கொள்ள இயலாமல் இருந்தது. தற்போது தேர்தல் பணி முடிவுற்றதாலும், வரிவசூல் பணியினை 20 நாட்களுக்குள் 100 சதவீத இலக்கு எய்தவேண்டியுள்ளதாலும், அனைத்து வார்டுகளுக்கு நேரடியாக சென்று நடமாடும் வரிவசூல் மையம் மூலம் வரிவசூல் செய்து உடனுக்குடன் இரசீதுகள் வழங்கவேண்டியுள்ளதால் இந்நகராட்சியில் 1 வாகனம் மட்டும் உள்ளதால், கூடுதலாக நடமாடும் வரிவசூல் மையம் அமைக்க 2 வாகனங்களை வாடகை அடிப்படையில் பயன்படுத்தவும், ஒலிபெருக்கி வாடகைக்கு பயன்படுத்தவும் மற்றும் அதற்கு தேவையான யூ.பி.எஸ். பேட்டரி ஆகியவற்றை புதிதாக வாங்கவும் அதற்காகும் செலவினம் ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– வரிவசூல் பணியினை கருத்தில் கொண்டு அனுமதிக்கலாம்.

V Uthayakumar

நகரமன்றத் தலைவர்
காரமடை நகரமன்றம்

**21.03.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்டத்தின் தீர்மானங்கள்**

**பொருள் எண்.01**

ஏகமனதாக நன்றியினை தெரிவிக்க தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்.02, 03, 04**

பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.05**

பொருள் எண்.05 ஒத்திவைக்கப்பட்டது

**பொருள் எண்.06,07,08,09,10,11,12,13,14**

அங்கீகரிக்கப்பட்டது

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்

**//உண்மை நகல் //**

V Usha Venkatesh
தலைவர்,
காரமடை நகர்மன்றம்

# காரமடை நகராட்சி

2022 ம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் அவசரக் கூட்டம், காரமடை நகரமன்ற கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ் அவர்கள்**

25-3-22
நகரமன்றத் தலைவர்
காரமடை நகரமன்றம்

---

**பொருள் : 1**

காரமடை பேரூராட்சியின் 2020-2021ம் ஆண்டிற்கான ஆண்டுக்கணக்கு முடிக்கப்பட்டு கோவை உள்ளாட்சி தணிக்கை துறையால் வழங்கப்பட்ட தணிக்கை அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும். மேலும் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டமைக்கு ஆன தட்டச்சு செலவினத்தொகை ரூ.7500/-யை செலுத்த நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அ.கு :-** அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 2**

காரமடை நகராட்சியின் 2021-2022ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு மற்றும் 2022-2023ம் ஆண்டு திட்ட மதிப்பீடு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :-** அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 3**

காரமடை பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. பேரூராட்சியாக இருந்தபோது பொதுமக்கள் அவர்களது தேவையினை துரிதமாக மேற்கொள்ள கீழ்காணும் சேவைகளுக்கான பிரத்யேக விண்ணப்பங்கள் ஏதும் இல்லை. மேலும் அனைத்து நகராட்சிகளிலும் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு பிரத்யேக விண்ணப்பங்களும் அதற்கான கட்டணத்தொகையும் வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே தற்போது தரம் உயர்த்தப்பட்ட காரமடை நகராட்சியில் பொது மக்களுக்கான கீழ்காணும் சேவைகளுக்கான விண்ணப்பங்களுக்கு கீழ்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விண்ணப்பம் விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | பிறப்பு சான்று கோரும் விண்ணப்பம் | 50/- |
| 2 | இறப்பு சான்று கோரும் விண்ணப்பம் | 50/- |
| 3 | கட்டட வரைபட அனுமதி கோரும் விண்ணப்பம் | 100/- |
| 4 | சொத்துவரி விதிக்க கோரும் விண்ணப்பம் | 100/- |
| 5 | சொத்துவரி பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பம் | 100/- |
| 6 | குடிநீர் இணைப்பு கோரும் விண்ணப்பம் | 100/- |
| 7 | குடிநீர் இணைப்பு துண்டிப்பு சரிசெய்ய கோரும் விண்ணப்பம் | 25/- |
| 8 | தொழில் உரிமக்கட்டணம் கோரும் விண்ணப்பம் | 100/- |
| 9 | ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு அனுமதி கோரும் விண்ணப்பம் | 50/- |

<u>அ.கு :-</u> பொது மக்களுக்கு அவர்களது சேவையினை துரிதப்படுத்தவும், அதற்கான மேற்படி விண்ணப்பத்தொகையினை நிர்ணயம் செய்ய அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் :4</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25896/2021/IT, நாள்.10.03.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, காரமடை பேரூராட்சியால் தீர்மானம் எண்.56, நாள்.17.08.1998ன்படி சொத்துவரியில் பாகம் ஆண்டு மதிப்பில் அரையாண்டிற்கு கீழ்காணும் விபரப்படியான பிற சேவைகளுக்கான வரி சதவீதம் நிர்ணயிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

1)பொது காரியத்திற்கான வரி – 2%
2) வடிகால் வரி – 2%
3) தெருவிளக்கு வரி – 2%
4) துப்புரவு வரி – 2%
5) குடிநீர் வரி – 2%
**மொத்தம் – 10%**

நகராட்சிகளில் பொதுநிதி, குடிநீர் வடிகால் வரி, கல்விநிதி வரி என தனித்தனியாக வங்கி கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பேரூராட்சிகளில் ஒரே கணக்காக பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் 01.04.2022 அதாவது 2022-2023 நிதியாண்டு முதல் மேற்கண்டவாறு வங்கி கணக்குகள் நடைமுறைப்படுத்த கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால் சொத்துவரியில் வரும் குடிநீர்வரி 2%த்தினை குடிநீர் வடிகால் நிதி கணக்கில் செலுத்தவும், குடிநீர் கட்டணத் தொகையினையும் குடிநீர் வடிகால் நிதி கணக்கில் பராமரிக்கவும், இதற்கென குடிநீர் வடிகால் நிதி கணக்கினை 01.04.2022 முதல் தனியாக பராமரிக்கவேண்டும். மேலும் தற்போது நகராட்சி பகுதியில் உள்ள கல்வி கட்டடங்கள் நகராட்சி பராமரிப்பில் இல்லாததால் அதற்கு தனியாக வங்கி கணக்கு துவங்க வேண்டியதில்லை. எனவே குடிநீர் வடிகால் நிதி கணக்கு துவங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அ.கு :-** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதி கணக்கு துவங்க அனுமதிக்கலாம்.

**பொருள் : 5**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்கள் 23.03.2022ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | குத்தகை இனம் | 2021-2022ம் ஆண்டு ஏலத் தொகை (ரூ) | மூன்றாண்டு சராசரி (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | காரமடை வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம். (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) | 3691080 | 3518089 | ரூ.42,50,000/- ஒப்பந்தப்புள்ளி | திரு.ராஜன் | சென்ற வருட ஏலத்தொகையிலிருந்து ரூ.5,58,920/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம் |
| 2 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.04 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு– மாத வாடகை அடிப்படையில்) | 73140 | 73140 | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வரவில்லை | | மறு ஏலம் கோரலாம் |
| 3 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.05 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு – மாத வாடகை அடிப்படையில்) | 38400 | 38400 | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வரவில்லை | | மறு ஏலம் கோரலாம் |
| 4 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.07 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு – மாத வாடகை அடிப்படையில்) | 52176 | 52176 | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வரவில்லை | | மறு ஏலம் கோரலாம் |
| 5 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.08 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு – மாத வாடகை அடிப்படையில்) | 25200 | 25200 | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வரவில்லை | | மறு ஏலம் கோரலாம் |
| 6 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.11 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு – மாத வாடகை அடிப்படையில்) | 31200 | 31200 | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வரவில்லை | | மறு ஏலம் கோரலாம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.12 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு – மாத வாடகை அடிப்படையில்) | 55212 | 55212 | ஏலத்தில் ஒருவர் மட்டும் வந்ததால் ஏல கேள்வி கேட்கவில்லை. மேலும் ஒரு ஒப்பந்தப்புள்ளி மூடி முத்திரையிடப்படாததால் நிராகரிக்கப்பட்டது. | | மறு ஏலம் கோரலாம் |
| 8 | அண்ணா பேருந்து நிலைய நவீன கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) | 53268 | 50764 | ரூ.1,66,600/- ஒப்பந்தப்புள்ளி | திரு.சந்தோஷ் குமார் | சென்ற வருட ஏலத்தொகையி லிருந்து ரூ.1,13,332/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம் |
| 9 | வட்டக்கிணறு தெற்கு பக்கம் உள்ள காலியிடம் டீ கடை வைத்தல். | 42084 | 40088 | ரூ.92,600/- ஒப்பந்தப்புள்ளி | திரு.பிரகாஷம் | சென்ற வருட ஏலத்தொகையி லிருந்து ரூ.50,516/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம் |
| 10 | காரமடை நகராட்சி அலுவலகத்திற்கு வடக்குபுறமுள்ள இடத்தில் சைக்கிள் ஸ்டாண்ட் நடத்துதல். (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) | 291048 | 277379 | ரூ.3,60,600/- ஒப்பந்தப்புள்ளி | திரு.எ.சரவணன் | சென்ற வருட ஏலத்தொகையி லிருந்து ரூ.69,552/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம் |

அ.கு :- மேற்கண்ட ஏல இனங்களில் வரிசை எண்.1, 8, 9 மற்றும் 10 ஆகியவற்றிற்கு அதிகபட்சமாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் கலம் 7ல் குறிப்பிட்டுள்ளபடி ஏல இனம் ஊர்ஜிதம் செய்ய அங்கீகரிக்கலாம். மேலும் வரிசை எண்.2 முதல் 7 முடிய ஏல இனங்களை மறு ஏலம் விட மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள் : 6

காரமடை நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.10யை ஏலம் எடுத்து நடத்தி வரும் திருமதி.செல்வி மற்றும் கடை எண்.14யை ஏலம் எடுத்து நடத்தி வரும் திரு.சக்திவேல் ஆகியோர்கள் தங்களது குடும்ப சூழ்நிலை காரணமாக மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாததால் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக கடிதம் அளித்துள்ளார்கள். எனவே மேற்படி கடிதத்தின் அடிப்படையில் மேற்படி வணிக வளாக கடை எண்.10 மற்றும் 14யை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அ.கு :- காரமடை நகராட்சி குத்தகை இனங்கள் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு உடனடியாக ஏலம் விட அங்கீகரிக்கலாம். மேலும் ஏலம்விடும் வகையில் ஏற்படும் வருவாய் இழப்பிற்கு குத்தகை நிபந்தனைகளின்படி மேற்படி திருமதி.செல்வி மற்றும் திரு.சக்திவேல் ஆகியோருக்கு பொறுப்பு நிர்ணயிக்கலாம்.

**பொருள் : 7**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்கள் 31.03.2022 உடன் குத்தகை காலம் முடிவடையவுள்ளதாலும், ஏற்கனவே குத்தகைக்கு எடுத்தவர்கள் அரசாணைப்படி உயர்வு செய்து தொடர்ந்து நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாலும், கீழ்காணும் குத்தகை இனங்களை அரசாணைப்படி உயர்வு செய்து புதுப்பித்தல் செய்து தருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை விபரம் | குத்தகைதாரர் | முடிவடையும் நாள் | 2021-22 ஏலத் தொகை (ரூ) ஒருவருடத் திற்கானது | அரசு ஆணைப்படி ஆண்டுக்கு 5% வீதம் மூன்று ஆண்டுளுக்கு 15% உயர்வு செய்யும் தொகை (ரூ) | 15% உயர்வு செய்து புதுப்பித்து வழங்கும் ஏலத் தொகை (ரூ) ஒருவருடத் திற்கானது | புதுப்பித்தல் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காமராஜர் சாலை வணிக வளாக கடை எண்.01 | வெ.பாலசுப்பிரமணியன் | 31.03.2022 | 249780 | 37467 | 287247 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 2 | காமராஜர் சாலை வணிக வளாக கடை எண்.02 | எஸ்.ஷேக் அமானுல்லா | 31.03.2022 | 205200 | 30780 | 235980 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 3 | காமராஜர் சாலை வணிக வளாக கடை எண்.03 | வேலுமணி | 31.03.2022 | 189756 | 28463 | 218219 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 4 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.01 | திரு.எ.ஆறுமுகம் | 31.03.2022 | 43476 | 6521 | 49997 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 5 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.02 | திரு.இ.குணசேகரன் | 31.03.2022 | 124200 | 18630 | 142830 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 6 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.10 | திரு.கே.ரங்கசாமி | 31.03.2022 | 42864 | 6430 | 49294 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 7 | பள்ளிவாசல் வீதி கறிக்கடை எண்.01 | திரு.குமார் | 31.03.2022 | 22080 | 3312 | 25392 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 8 | பள்ளிவாசல் வீதி கறிக்கடை எண்.02 | திரு.ஜெகநாதன் | 31.03.2022 | 24840 | 3726 | 28566 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 9 | பள்ளிவாசல் வீதி கறிக்கடை எண்.03 | திருமதி.நீலவேணி | 31.03.2022 | 24156 | 3623 | 27779 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 10 | பள்ளிவாசல் வீதி கறிக்கடை எண்.04 | திரு.ராமச்சந்திரன் | 31.03.2022 | 35184 | 5278 | 40462 | 01.04.2022 முதல் 31.03.2025 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | பள்ளிவாசல் வீதி கறிக்கடை எண்.05 | திருமதி.சாந்தி | 31.03.2022 | 28296 | 4244 | 32540 | 01.04.2022 முதல் 31.03.2025 |
| 12 | பள்ளிவாசல் வீதி கறிக்கடை எண்.06 | திரு.அசேன் | 31.03.2022 | 48300 | 7245 | 55545 | 01.04.2022 முதல் 31.03.2025 |

<u>அ.கு :-</u> மேற்கண்ட குத்தகை இனங்களை அரசாணைப்படி உயர்வு செய்து வழங்க அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் : 8</u>

காரமடை நகராட்சியில் தினமும் வசூலிக்கப்படும் தொகைகளை அடுத்த நாள் வங்கியில் செலுத்தும் வரை பாதுகாப்பாக வைப்பதற்கு நாளது தேதி வரையில் உரிய பாதுகாப்பு பெட்டகம் இல்லாமல் உள்ளதனால், அலுவலக ரொக்கத்தினை கையாள அதிக சிரமங்கள் ஏற்படுகிறது. எனவே இதற்கென தேர்ந்த பாதுகாப்பு பெட்டகம் வாங்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரான தி/வா.எம்.பி.எம்.முத்து அசோசியேட்ஸ், எண்.51&52, ராமச்சந்திரா ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் என்பவரிடமிருந்து விலைப்புள்ளி ரூ.2,28,000/-க்கு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையில் அலுவலக வசூல் ரொக்கத்தை பாதுகாப்பாக வைப்பதற்கு பாதுகாப்பு பெட்டகம் (goorej Locker) சப்ளை செய்ய வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு :-</u> அலுவலக நிர்வாக நலன் கருதி அங்கீகரிக்கலாம்.

<u>பொருள் : 9</u>

காரமடை நகராட்சிக்கு சொந்தமான சைக்கிள் ஸ்டாண்ட் வாடகை தொகை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது வரை வசூலிக்கப்பட்டு வருவதாகவும், அதை கீழ்காணும் விபரப்படி உயர்த்தி நிர்ணயம் செய்து தருமாறு குத்தகைதாரர் விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையிலும், 01.04.2022 முதல் கீழ்காணும் விபரப்படி சைக்கிள் ஸ்டாண்ட் வாடகை திருத்தி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு

| வ.எண் | விபரம் | தற்போது வசூலிக்கப்படும் தொகை (ரூ) | மாற்றம் செய்ய வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | சைக்கிள் ஒன்றுக்கு (12 மணி நேரத்திற்கு) | 2.00 | 5.00 |
| 2 | ஸ்கூட்டர் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் (12 மணி நேரத்திற்கு) | 5.00 | 10.00 |

<u>அ.கு :-</u> அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 10**

காரமடை நகராட்சிக் சொந்தமான தினசரி மற்றும் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் தொகை கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்டு அதே தொகை தற்போதுவரை வசூலிக்கப்பட்டு வருவதாகவும், அதை கீழ்காணும் விபரப்படி உயர்த்தி நிர்ணயம் செய்து தருமாறு குத்தகைதாரர் விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி விண்ணபத்தின் அடிப்படையிலும், 01.04.2022 முதல் கீழ்காணும் விபரப்படி சைக்கிள் ஸ்டாண்ட் வாடகை திருத்தி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு

| வ.எண் | விபரம் | டெண்டர் மற்றும் ஏல அறிவிப்பின்படி வசூலிக்கப்படும் தொகை (ரு) | நிர்ணயம் செய்ய வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | கூடை ஒன்றுக்கு | 2 | 10 |
| 2 | மூட்டை ஒன்றுக்கு | 2 | 10 |
| 3 | பாரமேற்றிய நான்கு சக்கரர மோட்டார் வாகனம் 1க்கு உள்ளே போக ஒவ்வொரு தடவைக்கும் | 40 | 150 |
| 4 | பாரமேற்றிய மூன்று சக்கரர மோட்டார் வாகனம் 1க்கு உள்ளே போக ஒவ்வொரு தடவைக்கும் | - | 100 |
| 5 | பாரமேற்றாத நான்கு சக்கரர மோட்டார் வாகனம் 1க்கு உள்ளே போக ஒவ்வொரு தடவைக்கும் | 20 | 100 |
| 6 | பாரமேற்றாத மூன்று சக்கரர மோட்டார் வாகனம் 1க்கு உள்ளே போக ஒவ்வொரு தடவைக்கும் | - | 70 |
| 7 | இரு சக்கர வாகனத்தில் வரும் உருப்படி 1க்கு உள்ளே போக ஒவ்வொரு தடவைக்கும் | 2 | 10 |
| 8 | கடைகள் 20 சதுரடி கொண்டது (பழையது) தற்போது கடைகள் 100 சதுரடி கொண்ட கடை ஒன்றிற்கு (நாள் ஒன்றிற்கு) | 20 | 70 |
| 9 | தார்சு கட்டடத்தில் இயங்கும் கடை ஒன்றிற்கு (நாள் ஒன்றிற்கு) | 70 | 100 |

**அ.கு :-** அங்கீகரிக்கலாம்.

25.3.22
நகரமன்றத் தலைவர்
காரமடை நகரமன்றம்

**28.03.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற அவசரக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

**பொருள் எண்.01**

பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.02**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.03**

இறப்பு சான்றிதழ் இலவசமாக வழங்கவும், பிற விண்ணப்ப கட்டணங்களை அங்கீகரிக்கப்பட்டும் 01.04.2022 முதல் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.04**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.05**

வரிசை எண்.1, 8, 9, 10 ஆகிய உச்ச கேள்வி தொகை அங்கீகரிக்கப்பட்டது. வரிசை எண்.2, 3, 4, 5, 6, 7 ஆகிய இனங்களுக்கு மறு ஏலம் விட தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.06, 07, 08**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.09, 10**

01.04.2022 முதல் ஏலம் விடப்பட்டுள்ளதால், 01.04.2022 முதல் உயர்வு அளிக்க இயலாது என்பதனால் இப்பொருள் நிராகரிக்கப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்

**//உண்மை நகல் //**

தலைவர்,
காரமடை நகர்மன்றம்